## சேலம் – அம்மாப்பேட்டையில்

# “உங்களுடன் ஸ்டாலின்” முகாமில் 17 மனுக்களுக்கு உடனடி தீர்வு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் நடவடிக்கை!

சேலம், ஜூலை 23-

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமில் இன்றைய தினம் மனு வழங்கிய 17 நபர்களின் மனுக்கள் மீது உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று முகாம் நடைபெறும் அம்மாப்பேட்டையில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட போது இதை தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், அம்மாபேட்டை மண்டலத்திற்குட்பட்ட வார்டு - 38, 39 பகுதிகளுக்கு செட்டிக்கார மண்டபத்தில் நேற்று (22.07.2025) நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டம் 15.7.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. ”உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணப்பட உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முதலமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் கடந்த 18.07.2025 அன்று வரை நடைபெற்ற”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 9,840 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 11,188 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (22.07.2025) சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம் வார்டு - 38, 39 பகுதிகளுக்கு அம்மாப்பேட்டை, தங்கம் தெரு, செட்டிக்கார மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, தளவாய்பட்டி பகுதிகளுக்கு உட்பட்டவர்களுக்கு தளவாய்பட்டி சமுதாயக்கூடத்திலும், தாரமங்கலம் நகராட்சி வார்டு 1, 2, 3க்குட்பட்ட பகுதிகளுக்கு ஜலகண்டாபுரம் பிரதான சாலையில் உள்ள பொன்னுசாமி திருமண மண்டபத்திலும், கொங்கணாபுரம் பேரூராட்சி வார்டு 1,2,3,4,5, 6,7,8,10க்குட்பட்ட பகுதிகளுக்கு ரங்கம்பாளையம் ஆனந்த மஹாலிலும், கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், சித்திரைப் பட்டிபுதூர் பகுதிகளுக்கு கொளத்தூர் சோதனைச் சாவடி எஸ்.எஸ் மஹாலிலும், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், சந்தை தானம் பட்டி பகுதிகளுக்கு கோனூர் ஊராட்சி அலுவலகத்திலும் நடைபெற்று வருகிறது.

சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை மண்டலம் வார்டு - 38, 39 பகுதிகளுக்கு அம்மாப்பேட்டை, தங்கம் தெரு, செட்டிக்கார மண்டபத்தில் நடைபெற்ற முகாமில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 7 நபர்களுக்கு குடிநீர் இணைப்புக்கான ஆணைகளையும், 3 நபர்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம், 4 நபர்களுக்கு பிறப்புச்சான்றும், 1 நபருக்கு குடும்ப அட்டையும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.16,500 மதிப்பிலான சக்கர நாற்காலியும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1,200 மதிப்பிலான ஊன்றுகோலும் என மொத்தம் 17 நபர்களின் மனுக்களுக்கு உடனடி தீர்வுகள் காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் பொதுமக்கள் எவ்வித சிரமமும் இன்றி தங்களது கோரிக்கை மனுக்களை வழங்கிட ஏதுவாக மேற்கொள்ளப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.



நேற்று (22.07.2025) மேயர் ஆர்.பிரியா, பெருங்குடி மண்டலம், வார்டு–181, கொட்டிவாக்கத்தில் உள்ள ஏ.ஜி.எஸ். சமூக நலக் கூடத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினைப் பார்வையிட்டு பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களுக்கான தீர்வுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ், மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், தெற்கு வட்டார துணை ஆணையாளர் அஃதாப் ரசூல், நிலைக்குழுத் தலைவர் (கல்வி) த.விசுவநாதன், மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.வி.ரவிச்சந்திரன் (பெருங்குடி), வி.இ.மதியழகன் (சோழிங்கநல்லூர்) மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருநெல்வேலி மத்திய மாவட்டத்திற்குப் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய பகுதி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம், மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பா.வில்சன் மணிதுரை வரவேற்பு உரை நிகழ்த்தினார். திருநெல்வேலி மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆற்றவேண்டிய கழகப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். மேலும், இந்நிகழ்வில் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து தலைமைக் கழகச் செய்தித் தொடர்பு துணைச் செயலாளர் வழக்கறிஞர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், சமூக வலைதளத்தை ஆக்கப்பூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து சமூக வலைதள தன்னார்வலர் இளமாறன் அவர்களும் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர். இறுதியாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கோட்டையப்பன் கருப்பசாமி நன்றியுரை ஆற்றினார்.

## கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை! ஐட்ரீம் ஆர்.மூர்த்தி - ஜே.ஜே.எபினேசர் முன்னிலை!

# இராயபுரம் முன்னாள் பகுதிச் செயலாளர் கட்பீஸ் அ.பழனி 6ஆம் ஆண்டு நினைவுநாள்! நலஉதவிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் – ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்கினர்!

சென்னை, ஜூலை 23-

சென்னை வடக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் இராயபுரம் பகுதி முன்னாள் செயலாளர் கட்பீஸ் அ.பழனி அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு (21.07.2025 திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில்

பாலு தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, செ-21ல் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி தலைமை வகித்தார்.

ஐட்ரீம்.ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, இரா.செந்தில்குமார் வ.பெ.சுரேஷ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். லயோலா. கே. மதன், இர.பொன்இளவரசன், வை.கௌதமன், இ. ரவிகுமார், க.கலைச்செல்வன், ஆகியோர் வரவேற்றனர். இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கினர். இந்நிகழ்வில் தா.இளைய அருணா எம்.சி, பி.டி.பாண்டிசெல்வம், ந. மனோகரன், என்.மருதுகணேஷ், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க.நாகம்மை, நேதாஜி.யு.கணேசன், வே.சிவக்குமார், இராயபுரம். சு.சேகர், நா.சண்முகம், கி. ராஜேந்திரன், வண்ணை புகாரி, வெ.சு.சத்தியநாராயணன், ஏ.டி.மணி, லயன்.எம். தீனதயாளன், லியோ. டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமிவேலு, விமலாமோகன், பி. செந்தில்குமார், டாக்டர்.வை.கலைவாணன், எஸ்.எம்.பரசுராமன், வி.வி.ரமேஷ், க. கோவிந்தசாமி, ஜெ.கே. நாதன், பி.சதீஷ்குமார், பா. வேளாங்கன்னி எம்.சி, த. ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலட்சுமி, லோ. மோகன், எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், சு.திருஞானம், வே.மலையம்மாள், இ. மதன், கே.பி.சதீஷ்குமார், மாஸ்.டி.வெங்கடேசன், எம். கோவிந்தராஜ், எஸ்.பி.எஸ். புத்தன், நெல்லை.எம்.எம். சாமி, எரிமலைபாலு, பொன். லட்சுமி, சிவகுரு, என்.ஏழுமலை, எஸ்.ராதாகிருஷ்ணன், ஏ. வேணுகோபால், ஜி.சதீஸ்குமார், ஆர்.வி.கணேஷ், என். கிருஷ்ணன், க.கோவிந்தராஜ், பி.கண்ணன், இரா.பாலன், எம்.எல்.ரவி, எஸ்.புகழேந்தி, கொரியர்.பி.முருகன், பாலாலட்சுமணன், ஜெ.கௌரீஸ்வரன், தா.வ.மு.கஜேந்திரன், மா.நாகராசன், ப.குமார், ச. தமிழ்செல்வன், பொ.து. ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், எல்.சீனிவாசன், வி.குமார், அத்தோ.பி.முனுசாமி, எஸ். சுரேஷ், ஐசிஎப்.பழனி, நா. பாரி, எஸ்.யுவராஜ், இரா. பொன்முடி, ந.குமார்,எம். பாலாஜி, ஆர்.டி.ஜெய்சங்கர், எஸ்.முகமதுமொய்தீன், எம். பாலசுப்பிரமணியன், ஏ.அன்வர், பி.கே.மூர்த்தி, மா.ரூபசங்கர், ஜெ.சுரேஷ்பாபு, எம்.இ.சாகுல்அமீது, டாக்டர்.ஆர்.பாண்டியராஜன், கே.என்.பார்த்திபன், எம்.டி. மதன்ராஜ், மு.சாகுல்மீரான், ந.ம.மகேஷ்குமார், சி.லிங்கேசன், சி.மனோகரன், எஸ். குமார், எஸ்.கே.சந்திரபொம்மு, ஆர்.பரந்தாமன், டி.கருணாகரண், யு.அனிபா, கோ.ஹரிராமன், எஸ்.மணிகண்டன், எஸ்.அசோக், எல். கிருஷ்ணஹரிஹரன், பா.கதிரவன், எம்.டில்லிபாபு, சீமென்.கே.ரங்கராஜ், ஆ. ஆனந்தன், கோ.ஹரிஷ்குமார், ஜெ.வசந்தகுமார், பி.பிரபாகரன், ஒலி ஒளி ஆ. பாபு, ர.இம்ரான், கே.சிவதனுஷ், எம்.எம்.சந்துரு, த.ரவி, பி.எஸ்.வெங்கடேசன், எஸ். கே.செந்தில்குமார், சுவீஸ். ஆர்.இளையராஜா, எஸ்.குமரன், கே.அத்ரிபேகம், ஜெயா விேனர்ரீதர், பி.சுரேகா, ஏ.குமார், எம்.சௌந்தரபாண்டியன், ஏ.ஜீலியன், ப.ஆனந்தகுமார், எஸ்.எஸ். சங்கர், ஆர்.தங்கராஜ், கே.சி. பிரதாபன், என்.முத்துகுமார், எம்.பழனி, எம்.வி.நரசுமணி, ஏ.குமார், கட்பீஸ்.எல்.ராஜீ, ஏ.கதிரவன், பி.சுதாகர், கே.கைலாசம், எஸ்.ராஜசேகர், ஆர்.பாரதிதாசன், ஏ. ஞானசேகர், இராயபுரம் ராஜ், ஜே.சந்துரு, ஜி.உமாபதி, பீ.சத்தியநாராயணன், வி.சரவணன், ஜி.சம்பத், ஏ.சந்திரசேகர், ஆ.ரமேஷ், ஜி. பிரபு, ஜி.பாலா, எஸ்.பரணி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்: பி.ரவிசங்கர், நாட்டாமை.கே.லட்சுமணன், எம்.என்.வெங்கட், மோ.ரவிகுமார், சு.சசிதரன், மூ. விேனாத்குமார், எஸ்.பொன்னரசன், இரா.நரேஷ், என். சுனில்குமார், ம.அருண்பிரபாகரன், கா.சீனிவாசன், பி.விஷால்ஆனந்த், கு.கௌரிநாதன், அ.சந்திரசேகர், ஜி.கோதண்டராமன், ஏ.கதிரவன், வி.பிரேம்குமார், கொரியர்.எம்.முருகன், பா.சுதாகர், க.பாலகிருஷ்ணன், கா.ரீதர், எம்.தங்கராஜ், மற்றும் பலர் கலந்து கொண்டனர். என். அப்துல்மாலிக், அ.சாந்தா குமார், ஆகியோர் நன்றி கூறினர்.




